1975 ஏப்ரல் 1]

பாலக்கோம்பையில் புதிய கண்மாய்

* 510 வின—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி தொகுதியைச் சேர்ந்த பாலக்கோம்பையில் ஒரு கண்மாய் அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலயில் உள்ளது?

(இ) அதன் விபரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) இத்திட்டம் பரிசிலனையில் உள்ளது.

திரு. நா. வெ. குருசாமி: தலைவரவர்களே, இந்தக் கண்மாய் திட்டம் பல ஆண்டுகாலமாக அரசின் பரிசிலனையில் இருந்து கொண்டு இருக்கிறது. இந்தப் பகுதி இப்போது மிகவும் வறண்ட பகுதியாக இருக்கிறது. அங்கேயுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் அடிப்படையில்—அவர்கள் இப்போது வேலை எதுவும் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள்—அந்தத் திட்டத்தை உடனடியாக அரசு எடுத்து துவங்குவதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அது ஒரு சிக்கனமற்ற திட்டம் என்று ஏற்கனவே கைவிடப்பட்டது. அதை எப்படியாவது நிறைவேற்ற முடியுமா என்று பார்க்கும்படி வருவாய்த் துறை வாரியத்தைக் கேட்டு இருந்தோம். வருவாய்த்துறை வாரியத்திட மிருந்து இன்னும் பரிந்துரை அரசுக்கு வரவில்லை.

நல்லநாயகபுரம் ஏரிக்கு வரத்துக்கால்வாய்

* 511 வின—திரு. செ. சதாசிவம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம், வஞ்சினபுரம் ஊராட்சி நல்லநாயகபுரம் ஆயக்கட்டு ஏரிக்கு வரத்துக் கால்வாய் வெட்டும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டின் தொகை என்ன?

(உ) எப்பொழுது வேலை துவங்கப்படும்?

[1975 ஏப்ரல் 1

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) ரூ. 1.70 இலட்சம்.

(உ) இவ்வேலை 1975-76-ம் ஆண்டு எடுத்துக் கொள்வது பற்றி பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. சதாசிவம்: தலைவரவர்களே, நீண்டகாலமாக அந்த ஏரிக்கு நீர் வரத்து சரிவர இல்லாமல், அந்த ஏரியின்கீழ் இருக்கும் நிலமெல்லாம் வருஷா வருஷம் சாவியாகப்போகிறது. ஆகவே, அதை உடனடியாக நடைமுறைப்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, 1975-76-ம் ஆண்டுத் திட்டத்தில் எடுத்துக்கொள்வதாக இருக்கிறோம்.

பார்த்திபனூர் கண்மாய்

*512 வினா—**திரு. தொ. க. சிறைமீட்டான்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஊராட்சி ஒன்றியம், பார்த்திபனூர் கண்மாயினை மராமத்து செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இத்திட்டத்திற்கான முன்னிலை மதிப்பீடு ஸ்தலப் பொறியாளர்களால் தயார் செய்யப் பட்டு வருகின்றது.

(இ) இந்தக் கேள்வி எழவில்லை.

திரு. தொ. க. சிறைமீட்டான்: தலைவரவர்களே, இது ஒரு பெரிய கண்மாய் ஆகும். 2,000 ஏக்கருக்கு மேற்பட்ட கண்மாய் ஆகும். அதற்கு மதிப்பீடு தொகை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன். கால்வாயும் சேர்ந்து மதிப்பீடு செய்யப் பட்டு உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மதிப்பீடு அரசாங்கத்திற்கு வரவில்லை. இருந்தாலும் பார்த்திபனூரையும் சேர்த்து பழுது பார்க்க ரூ. 90,000 என்று உத்தேச மதிப்பீடு கொடுத்து இருக்கிறார்கள். இன்னும் அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.